# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1606/32 - 2009 ජුනි 19 වැනි සිකුරාදා - 2009.06.19

*1606/32 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

4 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சஹம்பதி அங்கம்மன ஆகிய நான், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் துணைப் பிரிவினது காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2009, ஏப்பிறல் 1 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இங்கு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் நலனுக்கான பெறுமானமாகப் பயன்படுத்த வேண்டிய பெறுமதியை இத்தால் நிர்ணயிக்கின்றேன். மேற்குறிப்பிட்ட பிரிவின் நோக்கங்களுக்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் மதிப்பீடு இதற்குப்படாது.

சஹம்பதி அங்கம்மன,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு,
2009, யூன் 16.

**அட்டவணை**

1. எவரேனும் தொழில் தருநர் ஒருவரின் ஊழியர் ஒருவருக்கு அல்லது அந்த ஊழியர் சார்பில் பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவருக்கு அத்தொழில் தருநரால் அல்லது அத்தொழில் தருநர் சார்பில் ஏதேனுமொரு பங்கினை ஒதுக்குவதன் மூலம் அல்லது கையேற்புச் செய்வதற்காக விருப்புத் தெரிவிப்பதன் மூலம் அத்தொழில் தருநரின் ஊழியருக்குச் சேர்கின்ற ஏதேனும் நன்மையின் "பெறுமானம்" எனக் கருதப்படுவது, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அத்தகைய பங்கொன்றை ஒதுக்கும் போது அல்லது பங்கினைக் கையளிக்கும் போது அல்லது விருப்பத்தை விற்பனை செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குறித்த ஒதுக்கத்திற்கு அல்லது கொடைக்காக அறவிடப்படும் தொகைக்கு மேலாக அப்பங்கிற்குரிய சந்தைப் பெறுமதியில் மிகையிருப்பின் அம்மிகையாகும்.

2. பிரிவு 4 (1) (ஈ) இன் நோக்கங்களுக்காக தொழில்தருநரால் வழங்கப்பட்ட ஏதேனும் "வாசஸ்தலத்தின் வாடகைப்" பெறுமானம்.

(i) சோலை வரி விதிக்கப்படாத பிரதேசமொன்றில் அமைந்துள்ளதொரு வாசஸ்தலமானவிடத்து மொத்த உழைப்பூதியத்தில் 10% அல்லது மாதமொன்றுக்கு 3,000 ரூபா ஆகிய இரண்டில் குறைந்த தொகை ;

(ii) தோட்ட பங்களாக்கல் விடயத்தில், மொத்த உழைப்பூதியத்தில் 7.5% அல்லது மாதமொன்றுக்கு 2,000 ரூபா ஆகிய இரண்டில் குறைந்த தொகை.

வாசஸ்தலங்களுக்காக தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளவிடத்து மொத்த உழைப்பூதியத்தில் 2.5% அல்லது மாதமொன்றுக்கு 1,500 ரூபா ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி மேலே நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியுடன் சேர்க்கப்படல் வேண்டும்.

ஊழியர் வதியும் வீடொன்று அல்லது வீட்டுத் தொகுதியொன்றுக்கான ஏதேனும் செலவு தொழில்தருநரால் மீளளிப்புச் செய்யப்படுமாயின் அந்த நன்மையின் பெறுமதியாக வேண்டியது தொழில்தருநரால் மீளளிப்புச் செய்யப்பட்ட உண்மையான செலவாகும்.

3. போக்குவரத்து வசதிகள் :

(அ) பின்வருவனவற்றின் தனியான பயன்பாட்டு நன்மைகளின் பெறுமதி :

1,500 சிசி அல்லது அதற்கு அதிகமான சிலிண்டர் கொள்ளளவுடைய தொழில் தருநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் மாதமொன்றிற்கு பதினையாயிரம் ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும் ;

1,500 சிசி இற்கு குறைவான சிலிண்டர் கொள்ளளவுடைய தொழில் தருநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் மாதமொன்றிற்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும் ;

தொழில்தருநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார் சைக்கிள் மாதமொன்றிற்கு இரண்டாயிரம் ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) பின்வருவனவற்றின் தனியான பயன்பாட்டு நன்மைகளின் பெறுமதி :

இயந்திரக் கொள்ளளவு எதுவும் கவனத்தில் கொள்ளப்படாது, ஊழியருக்கு சொந்தமான ஆனால் தொழில்தருநரினால் எரிபொருள் செலவினம் உரப்படும் ஏதேனும் மோட்டார் வாகனம் மாதமொன்றிற்கு ஐயாயிரம் ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும் ;

ஊழியருக்கு சொந்தமான ஆனால் தொழில்தருநரினால் எரிபொருள் செலவினம் உரப்படும் ஏதேனும் மோட்டார் சைக்கிள் மாதமொன்றிற்கு எழுநூற்றி ஐம்பது ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும் ;

(இ) பின்வருவனவற்றின் தனியான பயன்பாட்டு நன்மைகளின் பெறுமதி :

தொழில்தருநரினால் பிரயாணத்தின் சரியான பதிவு பேணப்படும் ஏதேனும் வாகனம் இயந்திரக் கொள்ளளவு நோக்கப்படாது, கிலோ மீற்றறொன்றுக்கு பதினைந்து ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும்.

தொழில்தருநரினால் பிரயாணத்தின் சரியான பதிவு பேணப்படும் ஏதேனும் மோட்டார் சைக்கிள் கிலோ மீற்றறொன்றுக்கு மூன்று ரூபாய்களாக இருக்கவேண்டுமென கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) ஊழியருக்கு சொந்தமான ஏதேனும் மோட்டார் வாகனம் அல்லது மோட்டார் சைக்கிள் பராமரிப்பு தொடர்பாக ஏதேனும் உண்மைச் செலவினம் தொழில்தருநரினால் உரப்பட்டிருக்கும் பொழுது நன்மையின் பெறுமதி தொழில்தருநரினால் உரப்பட்ட உண்மையான செலவினமாக இருத்தல் வேண்டும்.

3. பிற நன்மைகள் :

| | நன்மையின் தன்மை | நன்மைகளின் பெறுமானம் |
|---|---|---|
| 1. | வெளிநாட்டவர்களுக்கான ஹோட்டல் வசதியளித்தல் | இலங்கைக்கு வந்த திகதி தொடக்கம் முன்னைய 3 மாதங்களுக்கான செலவில் 25% உம் அதன் பின் 100% உம். |
| 2. | வேலையாட்களை வழங்கல் | செலவில் 100% |
| 3. | மின்சாரம் மற்றும் எரிவாயு போன்ற ஏற்பாடு | செலவில் 100% |
| 4. | மருத்துவ நன்மைகளை அளித்தல் | |
| | (i) தொழில்தருநர் காப்புறுதி தவணைக் கட்டணத்தின் பங்களிப்பைச் செய்யும் போது ; | ஊழியருக்கு மீளளிப்புச் செய்யப்படுகின்ற மருத்துவப்பட்டியல்களின் 100% தொகை (மீளளிப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில்) |
| | (ii) தொழில்தருநர் ஒவ்வொரு ஊழியரின் விடயத்திலும் தனித்தனியாக பங்களிப்புச் செய்யும் போது | குறித்த பங்களிப்புத் தொகையில் 100% |
| | (iii) தொழில்தருநரால் பட்டியல்கள் செலுத்தப்படும் போது | குறித்த மருத்துவப்பட்டியல்களின் 100% |

| நன்மையின் தன்மை | | நன்மைகளின் பெறுமானம் |
|---|---|---|
| 5. | இலவச உணவு வழங்கல் | செலவில் 100% |
| 6. | காப்புறுதித் தவணைக் கட்டணங்களை செலுத்துதல் | செலவில் 100% |
| 7. | தொலைபேசிப்பட்டியல்கள் மற்றும் ஆண்டுக் கட்டணங்களை செலுத்துதல் | செலவில் 50% |
| 8. | விமான டிக்கெட்டுகள் (விமானப் போக்குவரத்துக் கம்பனிகளின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் டிக்கெட்டுகள் தவிர்ந்த) | செலவில் 100% |
| 9. | வரி செலுத்தல் | செலுத்தப்பட்ட வரியின் அளவு (வரி அட்டவணை 6 இனைப் பார்க்கவும்) |

7 - 161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.